RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s843

OPEN ACCESS

# அறநெறிக் கூறும் இனியவை நாற்பது

என். ஆர். ஷிபஜா [அ, *]

[அ] தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக் கல்லூரி, திருவிதாங்கோடு-629174, தமிழ்நாடு, இந்தியா

# Highlighted Virtues in Iniyavai Narpatu

N.R. Shibaja [a, *]

[a] Department of Tamil, Muslim Arts College Jumma Masjid, Thiruvithamcode – 629174, Tamil Nadu, India

* Corresponding Author: shibaja1974@gmail.com

Received: 03-05-2021
Revised: 31-05-2022
Accepted: 05-06-2022
Published: 09-08-2022

## ABSTRACT

Virtue is living blamelessly in one's mind. Thiruvalluvar has said in the authority entitled Aran Emphasis that everything done without purity of heart is of an avaricious nature. The word Aram refers to ten things namely Dharma, Puniyam, Merit, Religion, Wisdom, Charity, Fasting, Cursing, Dharma Goddess, and Yaman. The term Aram is derived from the word Aru. Virtue is the elimination of evil, the removal of vice, the eradication of guilt, and freedom from worldly desires. Virtue is a measure of justice and it is a natural virtue that develops in society. If you want to achieve perfection of virtue, you need to be active in a state where the mind, language, and meaning are combined. In today's situation, we see the growing feeling of enmity among people on the basis of caste, religion, race, language, country, etc. It can be considered that the basic reason for the hatred of each other on the basis of religion and caste is flagging all over the world today. Therefore, love should be increased by eliminating enmity. Love is born in a heartless heart and respect is born in a heart without arrogance. The virtue that is necessary for today's practice is that people should protect all living beings as if they are their own life. justice literature is based on this unity. Therefore, this book is organized as a group for this concept. The author of Iniyavai Narpatu was Boothanchendanar. He was called Boothanchendanar, the son of a Madurai tamilaciriyar makanar. He points out that these are the good morals of the book.

**Keywords:** Virtue, Iniyavai Narpatu, Boothanchendanar, Aram

## முன்னுரை

அறம் என்பது ஒருவன் மனதில் குற்றம் இல்லாதவனாக வாழ்தலே ஆகும். அறம் மனத்தூய்மை இன்றிச் செய்யப்படும் அனைத்துமே ஆரவாரத் தன்மையுடையன என்று திருவள்ளுவர் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார். அறம் என்ற சொல்லுக்குத் தருமம், புண்ணியம், தகுதியானது, சமயம், ஞானம், அறச்சாலை, நோன்பு, சாபம், தரும தேவதை, யமன் எனப் பத்துப்பொருள்களைக் குறிக்கின்றது. ஆறு என்பதிலிருந்து வந்தது அறமாகும். தீமையை நீக்குவது, குறையை அகற்றுவது, குற்றத்தைத் துடைப்பது, உலக ஆசைகளிலிருந்து விடுபடுவது அறமாகும். அறம் என்பது நீதி என்பதன் அளவினதன்று அது சமுதாயத்தில் உருவாகும் ஒர் இயற்கைப் பேராற்றல் ஆகும். அறம் முழுமை பெற வேண்டுமெனில் மனம், மொழி, மெய் என்ற மூன்றும் இணைந்த நிலையில் செயலாற்றல் வேண்டும். இன்றைய நிலையில் சாதி, சமய, இன, மொழி, நாடு போன்றவற்றின் அடிப்படையில் மக்களுள் பகைமை உணர்வு வளர்ந்து வருவதைக் காண்கிறோம். மதத்தால், சாதியால் ஒருவரை ஒருவர் பகைக்கும் கொடுமை இன்று உலககெங்கும் கொடி கட்டிப்

பறக்கிறது இவற்றிற்கு அடிப்படைக் காரணம் மக்களிடம் அறச் சிந்தனைக் குறைவே எனக் கருதலாம். எனவே பகைமையைப் போக்கி அன்பைப் பெருக்க வேண்டும் இரக்கமற்ற நெஞ்சில் அன்பு பிறக்கும், ஆணவமில்லாத நெஞ்சில் மரியாதை பிறக்கும் என்ற வகையில் உள்ளத்தில் அறம் பிறந்து மெய்யுணர்வு பெற மக்கள் எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணிப் பாதுகாத்து வருவதே இன்றைய நடைமுறைக்குத் தேவையான அறமாகும். இவ்வொருமைப்பாட்டை அடித்தளமாகக் கொண்டு எழுந்தவையே நீதி இலக்கியங்கள். எனவே இக்கருத்துக்கு அணியாக அமைக்கப் பட்டிருப்பது இனியவை நாற்பது என்ற இந்நூல் ஆகும். இனியவை நாற்பதின் ஆசிரியர் பூதஞ்சேந்தனார். இவரை மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் என்று அழைத்தனர். அவர் இந்நூலின் அறநெறியான நல்லவை இவை என்று எடுத்துரைக்கின்றார். அவற்றைப் பற்றி இவ்வாய்வுக் கட்டுரையில் ஆராய்ந்து காண்போம்.

## நோக்கம்

இந்நூலின் வெண்பாக்கள் ஒவ்வொன்றிலும் மக்கள் நலம் பெற்று வாழ்வதற்கான நல்லறங்களைக் கூறுகின்றன. பெரும்பாலான வெண்பாக்களில் என்று செய்திகள் மட்டும் சொல்லப்படுகின்றன. சில சிறந்த நீதிகள் இதில் உண்டு இவ்வெண்பாக்கள் எளிதில் பொருள் தெரிந்து பயன்தரக் கூடியதாக அமைந்துள்ளது. மோனையும், எதுகையும் அமைந்த அழகிய வெண்பாக்களோடு சில பஃறொடை வெண்பாக்களும் இதில் உள்ளன. மெய், வாய், கண், நாக்கு, செவி என்பன ஐம்பொறிகள். இவைகளை அடக்கி ஆளும் மனிதனே மன அமைதியுடன் வாழ முடியும். அந்த உயர்ந்த நோக்கம் இன்றைய வாழ்க்கைக்குப் பெரிதும் தேவை அதுவே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

## ஐம்பொறிகளை அடக்கி ஆளும் நெறிமுறை

மனிதனுடைய எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் அவனது ஆசையே அந்த ஆசையை கைவிடுவானேல் அவனது துன்பம் அவனை விட்டு அகன்று விடும். ஐந்து புலன்களால் வருகின்ற ஆசையையும் பயிற்சி வயத்தால் நினைவிலிருந்து ஒழித்து விடுதல் வேண்டும். ஆசை என்னும் துன்பங்களுள் எல்லாம் கொடிய இன்பமாகிய பேராசை அழிந்தால் துன்பம் அற்று இன்பம் பெருகும்.

ஐம்பொறிகளின் வாயிலாக வரும் நினைப்பையும் ஆசையையும் அடக்கிக் கொள்வதே மிகச் சிறந்தது. கையிலே பொருள் கிடைப்பதாயிருப்பினும் கல்லாதவரை விட்டுப் பிரிதலே நன்று. நிலையில்லாத அறிவும், நெஞ்சிலே உறுதியும் இல்லாத மனிதரைச் சேராமல் இருப்பதே நலம் என்பதான உயர்ந்த அறநெறி முறையை பின்வருமாறு கூறுகிறது. இனியவை நாற்பது. ஐவாய வேட்கை யவாவடக்கண் முன்னினிதே கைவாய்ப் பொருள் பெறினுங், கல்லார்கட்டீர் வினிதே நில்லாத காட்சி நிறையின் மனிதரைப் புல்லா விடுத லினிது (Pulavar Kulu, 2005).

இவ்வாறு ஐம்பொறிகளால் அறிவு மயங்குதலும் அதனால் சேராதார் பக்கம் சேர்ந்து அறம் கெடுதலும் நிகழும்.

அறிவினால் சிறந்தவர்கள் சிறந்த செயல்களையே செய்வர். அறிவினை விரும்பாதவர்கள் தீவினைச் செயல்களைச் செய்வர். அதுபோல ஆசையைத் துறந்தவர்கள் வீடுபேறு அடைவர். கொடையினால் செல்வ நுகர்ச்சியும் தவத்தினால் சுவர்க்கமும் ஞானத்தால் வீடும் கிடைக்கும். மேலும் ஐம்பொறிகளின் அவாவினைக் கட்டுப்படுத்த வல்லானே, ஒழுக்க நெறி கொண்டு முக்தி நிலை அடைவான்.

“தானத்தால் போகம் தவத்தால் சுவர்க்கமாம்

ஞானத்தால் வீடாக நாட்டு” (Manickam, 2007)

பிறப்பார் பிறப்பார் அறனின் புறுவர்

துறப்பார் துறக்கத் தவர்

என்ற பாடலடிகள் குறிப்பிடத்தக்கது (Manickam, 2006). மனம், வாக்கு, செயல், இம்மூன்றிலும் அடக்கமுடையவர்கள் வீடு அடைவர் என்பதைப் பின்வரும் அடிகள் உணர்த்துகின்றன.

"வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற

செய்கை அடங்குதல் திப்பியமாம் - பொய்யின்றி

நெஞ்சம் அடங்குதல் வீடாகும் இம்மூன்றும்

வஞ்சத்தின் தீர்ந்த பொருள்". (Manickam, 2009)

## தன்மானம் உணர்த்தும் அறநெறி முறை

மனிதனுக்கு எல்லாவற்றையும் விட முக்கியமான உணர்ச்சி, தன்மானம் தான்? மான, அவமானம் என்னும் தன்மானமாகிய சுய மரியாதை தான் அவனது பிறப்புரிமை என கொள்ள வேண்டி இருக்கிறது. மனிதன் என்ற சொல்லே, 'மனம்' என்ற சொல்லில் இருந்து வந்தது தான். மனதில் இருந்து பிறப்பதே மானம். எனவே மனிதனிடம் மனித தன்மை இருப்பதற்கு காரணம் தன் மானம் அந்த தன் மானத்துடன் வாழாதவன் மனிதன் அல்லன். தன்மானமே உயிர் எனக் கொண்டவன் தான் மக்களால் மதிக்கப்படுவான். தன் மான உணர்ச்ச்சி எல்லா மக்களிடமும் உண்டு. சிலர் ஆபத்தும் மனச்சோர்வும் ஏற்படும் போது, அவ்வுணர்ச்சியை விட்டு விடுகின்றனர். எச்சமயத்திலும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதே மனிதத்தன்மை என்ற மேலான அறநெறி முறை காட்டப்பட்டுள்ளது.

மேலும் மானம் இழந்த பின் உயிர் வாழ்வதை விடச் செத்து மடிவதே சிறந்தது என்பதை,

"மான மழிந்த பின் வாழாமை முன்னினிதே

தான மழியாமைத் தானடங்கி வாழ்வினிதே

யூனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை

மானிடவர்க் கெல்லா மினிது"

என்னும் அடிகள் சுட்டுகின்றன (Pulavar Kulu, 2005).

பெருமை கெட்ட பின் உயிர் வாழாமை மிக இனிது. தானிருந்து வாழும் இருப்பில் சிதையாதபடி தான் அடங்கி வாழ்தல் இனிது. குறைவு சிறிதும். இல்லாது மிக்க பொருளுடையவராக இருத்தல் மக்கள் எல்லோருக்கும் இனிது என்று கூறுகின்றார் பூதஞ்நேதனார்.

"அதற் சென்று வாழாவை யாற்ற வினிதே

குதர் சென்று கொள்ளாத கூர்மை யினிதே

யுயிர் சென்று தான்படினு முண்ணார்கைத் துண்ணாய்

பெருமை போற் பீடுடைய தில்"

பிறர் வழிபோய் முயன்று வாழாமை மிக இனிது (Pulavar Kulu, 2005). தப்பு வழியிற் சென்று நூற்குப் பொருள் கொள்ளாத மதி நுட்பம் இனிது. உயிர் இறந்தாலும் உண்ணத்தகாதார் கையிலுணவை உண்ணாத பெருமை போல் பெருமையுடையது எதுவுமில்லை என்று இனியவை நாற்பது சிறந்து அறநெறி முறையைக் கூறுகின்றது.

மானம் அழிதலை நிலையினின்றுக் தாழ்தல் என திருவள்ளுவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

"தலையி னிழிந்த மயிர்அனையர் மாந்தர்

நிலையின் இழிந்தக் கடை"

எனவும் (Pulavar Krishnan, 2003).

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்

உயிர் நீப்பர் மானம் வரின்"

என்னும் ஊனமில்லாத உயிர்ந்த பொருள் கல்வியே என்பதை (Pulavar Krishnan, 2003),

"கேடுஇல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு

மாடுஅல்ல மற்றை யவை" (Pulavar Krishnan, 2003)

எனவும்

"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து

மன்னுயிர்க்கு எல்லாம் இனிது"

தம்மைவிடத் தம் மக்கள் அறிவு வளர்ச்சி பெற்றிருப்பது பெற்றோர்க்கு மட்டுமின்றி நில உலகத்து எல்லா உயிர்க்கும் நன்மை தருவதாகும் என்ற திருவள்ளுவரின் கருத்தையே பின்வரும் இனியவை நாற்பது வெண்பா எடுத்துரைக்கின்றது (Pulavar Krishnan, 2003).

"குழவி தளர்நடை காண்ட லினிதே

யவர் மழலை கேட்ட லமிழ்தி னினிதே

வினையுடையான் வந்தடைந்து வெய்துறும் போழ்து

மனைஞ்சா னாக லினிது"

குழந்தைகளது தளர்நடை காணுதல் இனிது (Pulavar Kulu, 2005). அக்குழந்தைகளது மழலைச் சொற்களை கேட்டல் தேவாமிர்தத்தினும் இனிது தீவினை செய்தவன் அதன் பயனாகிய துன்பத்தின்பால் வந்து சேர்ந்து துன்பமடையும் காலத்தும் மனம் அஞ்சாது இருத்தல் இனிது என்று வாழ்வின் உன்னத அறநெறி முறை கூறப்பட்டுள்ள சிறந்த வெண்பா இது ஆகும். இக்கருத்தைக் கொண்டு புறநானூற்றுப் பாடலில் பாண்டியன் அறிவுடை நம்பி நிலையாக கூறப்படும் செய்தி.

"குறு குறு நடந்து, சிறுகை நீட்டி

இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்

நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை இல்லோர்க்குப்

பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே" (Puliyur kesigan, 2009)

என்று பாண்டிய மன்னன் பிள்ளை இல்லாது பேராசையால் உழன்றுபின் பிள்ளை பெற்று தான் அடைந்த வாழ்க்கைப் பயனை இப்பாடல் வழி எடுத்துக் கூறியுள்ளார் என்பது போற்றுதற்குரியது ஆகும்.

அறம் என்பது ஒருவகை வாழ்க்கை நெறி எனக் கூறலாம். அதாவது மனித வாழ்க்கை செம்மையுடையதாகவும், அமைதியுடையதாகவும், பயனுடையதாகவும் மெய்ம்மை நெறியாகும்.

'அறம்' எனும் சொல்லிற்குரிய நேரான பொருள் 'அறுத்துச் செல்வது' ஆகும். மனித இனத்தின் நலத்திற்காகவும், முன்னெற்றத்திற்காகவும் மனித சமுதாயம் வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறியே.

'அறம்' என்பது இதனால் பெறப்படுகிறது அறச் செயல்கள் அனைத்தின் கால கண்ணாடியாக மேல் வரிச் சட்டமாக அறம் போற்றப்படுகிறது. இந்த நோக்கு நிலையில் 'அறம்' பண்பாடு எனும் பொருள் பயப்பதாக அமைகிறது. தலைசிறந்த இலக்கியப் படைப்பாளரும் திறனாய்வாளருமான. எஸ்.எலியட் "வாழ்க்கையைப் பயன் மதிப்பு உடையதாகச் செய்வது பண்பாடு" என்று தெளிவுறுத்தி உள்ளார். இப்புதுமை நோக்கின் அடிப்படையில் அறத்தை விளக்குவதனால் அறமே பண்பாடு பண்பாடே அறம் எனக் கூறலாம்.

## அறத்தின் வகை

அறத்தை நம்முடைய முன்னோர்கள், முப்பத்திரண்டு வகையாகப் பாகுபடுத்தி உள்ளனர். அவை பொரும்பாலும் அறச் செயல்களையே குறிக்கும்.

"அந்நிலை மருங்கின் அற முதலாகிய

மும்முதற் பொருளும் உரிய என்ப"

எனவும்

"இன்பமும் பொருளும் அறனும்என்றாங்கு அன்புடன் புணர்ந்த ஐந்திணை மருங்கின்" உரை (Thamizhannal, 2000). கி.பி பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்த இலக்கண நூலான நன்னூல்'

"அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற் பயனே"

என்று கூறியுள்ளது (Ilavarasu, 2004)

## இலக்கியத்தில் அறநெறிக் கருத்துக்கள்

நம் இலக்கிய மரபில் இலக்கியத்தில் அறநெறிக் கருத்துக்கள் கொள்கையாகவே போற்றி வருகின்றனர். பவணந்தி முனிவர் இலக்கியத்தில் அமைய வேண்டிய பத்து அழகுகளைப் பற்றிக் கூறும் இடத்து, நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல் என்பதோடு,

"விழுமியது பயத்தல்" எனபதையும் இணைத்துக் கூறியுள்ளார்.

அறத்தான் வருவதே இன்பம் மற் றெல்லாம்

புறத்த புகழும் இல.

அறநெறியில் நின்று வாழ்வதன் பயனாக வருவதே உண்மையான நிலைத்த இன்பமாகும் (Pulavar Krishnan, 2003). அறத்தோடு பொருந்தாமல் வரும் மற்றவை எல்லாம் இன்பம் அல்ல. மேலும் அவை புகழையும் தருவன அல்ல என்ற திருவள்ளுவரின் கருத்துக்களோடு ஒன்றி,

"ஆற்றுந் துணையா லறஞ் செய்கை முன்னினதே"

தமக்கு இயலுமளவானால் அறஞ்செய்கை மிக இனிது என்னும் அறநெறி கூறப்பட்டுள்ளது (Pulavar Kulu, 2005).

"கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்

மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான் மலரவன் செய்

வெற்றுடம்பு மாய்வன போல் மாயாபுகழ் கொண்டு

மற்றிவர் செய்யும் உடம்பு"

இலக்கியம் அறக்கருத்தாகிய விழுமியத்தைப் பயப்பது, படிப்போர்க்கு இன்பம் தருவது, காலத்தில் கறைபடாது. மறைவுறாது என்றும் வாழ்வது, எனும் தமிழருடைய இலக்கியக் கொள்கை வெளிப்படும். ஒரு இலக்கியத்தைத் தரமானதா, அல்லது தரமற்றதா, என மதிப்பிடுவதற்கு அமைத்துக் கொள்ளப்பட்ட அடிப்படை அளவுகோலே, இந்த அறவியல் அனுகு முறையாகும் (Pulavar Kulu, 2005).

மேற்கு நாட்டுச் சிந்தனையில் இலக்கியத்தைச் சுவைப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உரிய ஒர் அனுகுமுறையாக இதனைப் போற்றி வருகின்றனர்.

இல்வாழ்க்கையாலும் அதன் சார்புகளாலும் அன்பு எழுகிறது. அன்பு மனமாசைக் கழுவுங் கருவியாகிறது. மன மாசற்ற நிலையே அறம் என்பது அறத்தை விளங்க வைப்பது அன்பு ஆகும்.

முன்னோர் கண்ட நெறி அன்பால் தெளிவுறும் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. அன்புடைய மக்கள் அணிபோன்றோர் என்பதை,

"அணி அன்னர் அன்புடைய மக்கள்"

இதைக் கொண்டு நீதி நூல்களுள் ஒன்றாக இனியவை நாற்பது அருளிய வாழ்கைக் கலையில் ஆழ்ந்து திளைத்தால் அது அன்புக்கலை அறக்கலை என்பது உறுதிப்படும் அக்கலை உலகை ஒரு குலமாக்குவதோடு ஒழுக்கமுடையதாகவும் ஆக்கும் வல்லமை கொண்டது ஆகும் (Manickam, 2006).

## முடிவுரை

அறம் என்பது தீமையை எதிர்க்கும் தெய்வீக சக்தி என்கிறார் ஜார்ஜ் எலியட் இனியவை நாற்பதில் உள்ள வெண்பாக்கள் அனைத்தும் சிறந்த அறநெறிமுறை கூறும் கருத்தமைந்தவை ஆகும். உலக மக்கள் உயர்ந்த வாழ்க்கைச் சிறப்பைக் காண்பதற்கு இந்நூல் உதவி செய்திருக்கிறது. ஒவ்வொருவருடைய ஒழுக்கச் சிறப்பை கண்முன் காட்டி உள்ளப் பாங்காய் வழி நடத்துகிறது. என்பதை இதன் முலம் அறிய முடிகிறது.

## References

Ilavarasu, Soma., (2004) Nannool Ezhuthathigaram, Mani Vasagar veeliyeedu, Chennai, India.

Kathir Murugu, (2007) Arputha Thiruvandhathi moolamum uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Manickam, A., (2006) Nanmanikadikai, Varthamanan Pathippagam, Chennai, India.

Manickam, A., (2009) Trikatugam, Varthamanan Pathippagam, Chennai, India.

Manikkam, A., (2007) Siru Pancha moolam padalkal, Varthamanan Pathippagam, Chennai, India.

Pulavar Krishnan, P., (2003) Thirukkural, Paavai Pathippagam, Chennai, India.

Pulavar Kulu, (2005) Iniyavai Narppathu, Goura Agencies, Chennai, India.

Puliyur kesigan, (2009) Purananuru, Paari niliyam, Chennai, India.

Thamizhannal, (2000) Tholkappiyam mollamum uraiyum, Meenakshi Pathippagam, Madurai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License